**Dear Fathers, Brothers and Sisters…**

Month of February is indeed a blessed month for our diocese for two reasons: 1. The Blessing and Dedication of the renovated Shrine Church of Our Lady of Lourdes, Chetpet on 1st Feb. 2022. in memory of the 125th Jubilee of its foundation. 2. The gracious presence of Most Rev. Dr. Leopoldo Girelli, Nuncio, India-Nepal for the Consecration of the renovated Shrine Church of Our Lady of Lourdes, Chetpet also his stay with us on the 2nd to celebrate the Feast of Presentation of Our Lord in the Cathedral. This is possible only by the Grace of God and His providence. Thus our joy is doubled and the gifts of God are manifold to our diocese. Let us pray for the success of this historical event that takes place in our diocese. At this juncture I, on behalf of all our priests, religious and people wholeheartedly welcome Most Rev. Dr. Leopoldo Girelli, Nuncio, India-Nepal to come and grace the occasion. It is my pleasure too to invite all our priests, religious and people to come and take part in this historical celebration and get God's blessings in abundance. On the same day we begin the Feast of Our Lady of Lourdes, Chetpet with the Flag hoisting by our Nuncio. The feast mass will be as per the schedule.

Candlemas, also called Presentation of the Lord or Presentation of Christ in the Temple or Hypapante, Christian festival on February 2 is the commemoration of the occasion when the Virgin Mary, in obedience to Jewish law, went to the Temple in Jerusalem both to be purified 40 days after the birth of her son, Jesus, and to sacrifice him to God as it was predestined by His firstborn status to serve as priest. The lesson we get from this feast is that as Simeon the devout Jew recognized Jesus in the Temple as the Messiah we also are called to identify Jesus in everyone who are the Temples of Holy Spirit as St. Paul says. Secondly we have to patiently wait for the revelation of God as both Simeon and Anna waited for the Messiah. Once again I would like to remind all our parish priests to organize the meetings for the Anbiams, Parish Council members and Youth and take to them the importance of SYNODAL CHURCH, conduct group discussions on the Synodal questionnaires and send the consolidated report to our diocesan coordinator.

I do appreciate all your wonderful ministry in your respective parishes and institutions at this Pandemic time. Kindly take care of yourself and help each other with brotherly care and concern.

God bless,
Yours in Christ Jesus,



Very Rev. Msgr. I. John Robert
Diocesan Administrator

## Nuncio's Program in Vellore
## 01/02/202- 02/02/2022

Dear Fathers, Brothers and Sisters

As we are well aware Our Nuncio Most Rev. Dr. Leopoldo Girelli is going to come to Vellore diocese for the Blessing and Dedication of the renovated church of Our Lady of Lourdes Shrine, Chetpet on 1st Feb. 2022. He will be staying with us and celebrate Feast mass (Presentation of Our Lord) at Cathedral on 2nd Feb. 2022. Since it is our diocesan event I cordially invite you all to come for both the celebrations and grace the occasion. In particular I ask all the fathers to come on the 2nd Feb. to concelebrate with Nuncio the feast mass that takes place in our Cathedral without fail. Kindly follow the program.

**01-02-2022 Blessing at Chetpet**

5:15 pm - Grand reception to Nuncio at 4 Roads, Chetpet
5:45 pm - Felicitation
6.30 pm - Flag Hoisting and Consecration of the Church
8.30 pm - Dinner

**02-02-2022 Fest Mass at Vellore Cathedral**

7:30 am - Adoration Monastery
8:15 am - Breakfast
9:00 am - Procession to Cathedral
9:30 am - Candle procession to Church and Mass

11:00 am - Felicitation
12:00 pm - Lunch
01:00pm - Departure to Airport

I request all the fathers to come for breakfast and get ready to welcome Nuncio at 9:15 am in the Cathedral premise. Let us pray for the success of the Nuncio's program in our Diocese. Let us come and share the joy of God's blessings through our Nuncio.

**Admin Program :**

**01. Tues Shrine of Our Lady of Lourdes Church blessing, Chetpet**

**02. Wed Feast Mass by Nuncio, Cathedral, Vellore**

**26. Sat Jubilee Mass, Sacred Heart Home, Auxilium College, Gandhinagar**

God bless,

Yours in Christ Jesus,



**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

**Monthly Recollection :**

Due to the continuation of the Covid-19 there won't be common monthly Recollection. Vicariate level monthly Recollection will continue.

Yours in Christ Jesus,



**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

## PROCURATOR'S OFFICE

### MISSION SUNDAY COLLECTION - 2021

| S.No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Arakkonam | 101120 |
| | **Total** | **101120** |

Thanks for your generous contribution for Mission Sunday Collection. Those who have not yet sent Mission Sunday Collection.

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

## குடும்பநலப் பணிக்குழு

திருமணத் தயாரிப்பு வகுப்புகள்

அன்பு பங்குத்தந்தையர்களே!

**உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்!**

திருமணத் தயாரிப்பு வகுப்புகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து தங்கள் பங்கு இளையோர்களை தவறாமல் அனுப்பிவைப்பதற்காக உங்களை மனதார பாராட்டுகிறேன்.

தற்போது 80% பங்கைச் சார்ந்த இளையோர் திருமணத் தயாரிப்பு வகுப்பில் தவறாது பங்கு கொள்கின்றனர். இன்னும் இருக்கின்ற 20% பங்குகள் பங்கு கொண்டால் மிகவும் சிறப்பாக இருக்கும். எனவே பங்குத் தந்தையர்கள் தங்கள் பங்கு இளையோரை உற்சாகப்படுத்தி அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பிப்ரவரி மாதம்**

05.02.2022 உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
19.02.2022 ஆயர் இல்லம், வேலூர்

நேரம் : காலை 9:00 முதல் மாலை 4:00 மணிவரை

**மார்ச் மாதம்**

05.03.2022 உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
19.03.2022 ஆயர் இல்லம், வேலூர்

நரம் : காலை 9:00 முதல் மாலை 4:00 மணி வரை

குறிப்பு : முக கவசத்தோடு திருமண வகுப்பிற்கு வரவும்.

தொடர்புக்கு : பேரருட்பணி **L.**இரமேஷ் அந்தோணி - 98948 91490
திரு. சாமுவேல், வேதியர் - 90478 90703

அருட்பணி. முனைவர் **L.இரமேஷ் அந்தோணி**
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம், வேலூர்.

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

21.12.2021 : அன்று TVMSSS பயிற்சி கூடத்தில் கிறிஸ்துமஸ் பெருவிழா இறைவணக்கத்துடனும் திரு. லூயிஸ் அவர்களின் வரவேற்புரையுடனும் துவங்கப்பட்டது. இவ்விழாவில் இயக்குநர் பேரருட்திரு S. ஜேம்ஸ் அவர்கள் தலைமையிலும் சிறப்பு அழைப்பாளராக POPE தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் திரு. L. ரொசாரியோ அவர்களும் பங்கேற்றனர். வேலூர் மறைமாவட்ட MBC கமிஷன் செயலர் அருட்பணி. மோட்சநாதன் அவர்களும், தளையாம்பள்ளம் பங்குதந்தை அருட்பணி ஜோசப் அவர்களும் கலந்துக்கொண்டனர். VSSS திட்ட மேலாளர் அவர்கள் புற்றுநோய் தடுப்பு பற்றி விழப்புணர்வு தந்தார். திரு. ரொசாரியோ அவர்கள் கிறிஸ்து பிறப்பு வாழ்த்து செய்தியில் வரலாறு கி.பி. & கி.மு என்று தொடங்குகிறது, உலகத்தில் அன்பின் அடிப்படையில் ஒரே தேவ தூதன் கிறிஸ்து என்றும் நாம் அனைவரும் கொடுத்து வைத்தவர்கள் என்று கூறினார். இயக்குநர் தந்தை அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தி வழங்கி, கோல்பிங் மற்றும் மகளிர் குழுவைச் சார்ந்த 200 நபர்களுக்கு சேலை வழங்கினார். கோல்பிங் குழுவினருக்கு நலத்திட்டங்கள் வழங்கினார். இவ்விழா ஏற்பாடுகளை TVMSSS திட்ட அலுவலர் திரு. L. தாமஸ் இன்பசேகர் அவர்கள் செய்தார்.

22.12.2021 : அன்று வேலூர் சமூக சேவை சங்க கருத்தரங்கு கூடத்தில் “கிறிஸ்து பிறப்பு விழா” இறைவணக்கத்தோடும் VSSS திட்ட மேலாளர் திரு. பேட்ரிக் அவர்களின் வரவேற்புடனும் துவங்கியது. மறைமாவட்ட

பரிபாலகர் பேரருட்பணி ஜ. ஜான் ராபர்ட் அவர்களின் தலைமையிலும், VSSS இயக்குநர் பேரருட்திரு S. ஜேம்ஸ் அவர்கள் மற்றும் ஆயர் இல்ல குருக்கள் அவர்களின் முன்னிலையிலும் இவ்விழா மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. VSSS இயக்குநர் அவர்கள் கிறிஸ்து பிறப்பு செய்தியும், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் வாழ்த்தும் வழங்கினார். மறைமாவட்ட பரிபாலகர் அவர்கள் VSSS இயக்குநர் பேரருட்திரு S. ஜேம்ஸ் அவர்கள் கொரானா நிவாரண பணிகளில் எடுத்த முயற்சிகளையும் செயல்களையும் பாராட்டினார். VSSS-ல் பல ஆண்டுகளாக சங்கம் மற்றும் மக்களின் வளர்ச்சிக்காக உழைத்து வரும் பணியாளர்களை வாழ்த்தியும், நன்றியும் கூறி, ஆசீரும் வழங்கினார். பங்கேற்பாளர்களுக்கு கோல்பிங் மற்றும் மகளிர் சங்கங்களுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். திருவண்ணாமலை, வேலூர் கோல்பிங் உறுப்பினர்களுக்கு கழிப்பறை, வீடு கட்டும் திட்டம், தொழிற்கல்வி, கறவல் மாடு மற்றும் வருமானம் பெருக்கு திட்டம் வழியாக ரூ. 8,35,000/-ம், கோல்பிங் சுழல்நிதி ரூ. 10,00,000/-ம் மற்றும் மகளிர் அமைப்புகளுக்கு VSSS சுழல்நிதி ரூ. 7,21,000/- வழங்கப்பட்டது.

**மழை, வெள்ள நிவாரண பணிகள் :**

நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தொடர் மழையின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பங்கு தந்தையர்கள் விண்ணப்பித்த குடும்பங்களுக்கு நிவாரண உதவி செய்ய வேலூர் சமூக சேவை சங்க இயக்குநர் பேரருட்திரு S. ஜேம்ஸ் அவர்கள் காரிதாஸ் இந்தியா நிறுவனத்திற்கு விண்ணப்பித்தார். காரிதாஸ் இந்தியா - காரிதாஸ் ஆங்காங் நிதி உதவி பெற்று 762 குடும்பங்களுக்கு நிவாரண பொருட்களின் தொகுப்பாக அரிசி 10 கிலோ, துவரம் பருப்பு 1 கிலோ, எண்ணெய் 1 லிட்டர், சர்க்கரை 1 கிலோ, உப்பு 1 கிலோ அனுப்பி வைத்தனர். இதனை VSSS இயக்குநர் மற்றும் பணியாளர்கள் வேலூர் மறைமாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 762 குடும்பங்களுக்கு வழங்கினர்.

செய்தி தொகுப்பு<br>
திரு. **A.பேட்ரிக்** &<br>
திரு. **T.இன்பசேகர்**<br>
**VSSS & TVMSSS** திட்டமேலாளர்கள்

பேரருட்திரு. **S.ஜேம்ஸ், MSW**<br>
இயக்குநர், **VSSS & TVMSSS**<br>
ஆயர் இல்லம், வேலூர்

## புனித வின்சென்ட் தே பவுல்

**திருமால்பாடி பங்கு**

18.12.2021 அன்று சேத்துப்பட்டு வட்டார சபைக்கு உட்பட்ட திருமால்பாடி பங்கில் கிறிஸ்து பிறப்பு விழாவும் புதிய வின்சென்ட் தே பவுல் குழுவும்

தொடங்குவதற்கு தயாரிப்பு நிகழ்வாக அருட்தந்தை இயேசு துரை அவர்களின் தலைமையில் கலந்தாய்வு நடைபெற்றது.

பங்குத்தந்தையின் வழிகாட்டுதலின்படி திரு. திலீப் ஆனந் அரக்கோணம், காட்பாடி வட்டார சபை தலைவர் திரு Y.D. மூர்த்தி, சபையின் மூத்த உறுப்பினர் திரு. பெரிய நாயகம் ஆகியோர் முன்னிலையில் 10 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இவ்விழா துவக்க செபம், வரவேற்பு, சபை பற்றிய விளக்கம் பகிர்தல், உதவிப் பொருட்கள் ஆசீர்வதிக்கப்படுதல், பயனாளிகளுக்கு வழங்குதல் என சிறப்பாக நிறைவுபெற்றது.

**திரு இருதய ஆண்டவர் கிளைச்சபை - கணியம்பாடி**

25-12-2021 அன்று திரு இருதய கிளைச்சபை சார்பாகவும், வேலூர் மத்திய சபையின் வெள்ளி விழா நினைவாகவும், மத்திய சபை தலைவர் ம. சார்லஸ் ஆரோக்கியராஜ் அவர்களின் முயற்சியாலும் வேப்பம்பட்டு கிளைப்பங்கில் உள்ள திருமதி. பாத்திமா அவர்களுக்கு புதிய இல்லம் கட்டித்தர முடிவு எடுக்கப்பட்டு பங்குத்தந்தை Dr. S. அன்பழகன் அவர்களிள் ஆசீர்வாதத்தோடு வீடு கட்டும் பணி தொடங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளைச்சபைத் தலைவர் G. பிரான்சிஸ் சேவியர் செயலர் C. தனிஸ்லாஸ், பொருளர் C. மரிய ஆன்டோ ஆகியோர் உடனிருந்தனர்.

பேரருள்திரு. **ஜெ.ஜெயபிரகாசம்** **ம.சார்லஸ் ஆரோக்கியராஜ்**
இயக்குநர், பக்த சபைகள் தலைவர், வேலூர் மத்திய சபை

## மரியாயின் சேனை

வேலூர் தூய விண்ணேற்பு அன்னை பேராலய மரியாயின் சேனை, கொமித்சிய நூற்றாண்டு நிறைவு விழா 19.12.2021 ஞாயிறு காலை 10.30 மணியளவில் ஆயர் இல்ல வளாகம், ஜுபிலி அரங்கத்தில் செபமாலையை தொடர்ந்து பேரருட்பணி ஐ. ஜான் ராபர்ட், மறைமாவட்ட பரிபாலகர் அவர்கள் முதலில் குத்துவிளக்கு ஏற்ற இறைவணக்கப் பாடல், சிறார்களின் வரவேற்பு நடனம் என நிகழ்வுகள் பெருமகிழ்வுடன் ஆரம்பமானது.

பேரருட்தந்தை J.ஜெயபிரகாசம், பக்த சபைகளின் இயக்குநர், இன்முகத்துடன் அனைவரையும் வரவேற்றார். கொமித்சிய தலைவி சகோதரி ரத்னா மேரி அவர்கள் விழாவின் நோக்கம், வளர்ச்சி மற்றும் தற்போதைய நிலை ஆகியவற்றைப் பற்றி விளக்கம் அளித்தார்கள்.

மறைமாவட்ட பரிபாலகர் ஐ. ஜான் ராபர்ட், அவர்கள் தனது ஆசியுரையில் சேனையின் உயர்ந்த நோக்கம், அசூர வளர்ச்சி மற்றும் அத்தியாவசிய இருத்தல் குறித்த தெளிவுகளை பதிவு செய்தார்கள். கொரோனா நோய் தொற்று மற்றும் முழு அடைப்பு இவைகளுக்கு மத்தியிலும் மரியாயின் சேனையினர் திருவிவிலியம் வாசிப்பு, கைநூல், அன்னையின் காட்சிகள், செபமாலை குறித்த கேள்விகள் அனுப்பி பதில்கள் பெற்றனர். எட்டு கியூரியாக்கள் மற்றும் எட்டு பிரசீடியம் இவைகளிலிருந்து 90 சேனையர்கள் நூற்றாண்டு நிறைவு விழாவில் நேரடியாக பங்கேற்றனர். பேரருட்தந்தை ஜெகதீஷ் அவர்கள் ஆயர் மாமன்றத்தில் விளக்கவுரை நல்க, சகோ எட்வின் ஆரி மற்றும் ரோஜா ஆரி அவர்கள் இணைந்து தாராளமாய் மதிய உணவு பகிர, அவர்களுக்கு நன்றி பாராட்டி நிகழ்வுகள் இனிதே நிறைவுபெற்றன.

சகோதரி. **ரத்னாமேரி,**
கொமித்சிய தலைவி

## பொது நிலையினர் பணிக்குழு

## UPSC – Civil Service Examination
## Preliminary Exam - 2022
## For IAS, IPS, IRS & Administrative Jobs

சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வை ஜுன் மாதம் 2022-ல் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்த உள்ளது. சிவில் சர்வீஸ் மெயின் தேர்வு எழுதுவதற்கு இந்த சிவில் சர்வீஸ் முதல்நிலைத் தேர்வை எழுத வேண்டும்.

### Stages of Examination : 1. Preliminary 2. Main Exam 3. Interview

இந்திய ஆட்சிப் பணிகளில் உயர் பொறுப்புகளை ஏற்று முக்கியத்துவம் வாய்ந்த நிர்வாகப் பணிகளில் சேர விரும்புபவர்கள் மத்திய அரசுப் பணியாள் தேர்வாணையம் (UPSC) நடத்தும் சிவில் சர்வீஸ் தேர்வுகளை எழுத வேண்டும். IAS எனப்படும். இந்தியன் அட்மினிஸ்டிரேட்டிவ் சர்வீஸ், இந்தியர் ஃபாரின் சர்வீஸ் (IFS), இந்தியன் போலீஸ் சர்வீஸ், (IPS) இந்தியன் ரெவின்யூ, சர்வீஸ், இந்தியன் டிபன்ஸ் அக்கவுண்ட்ஸ் சர்வீஸ் உள்பட 24 சேவைப் பணிகளில் தகுதியுடையவர்களைத் தேர்வு செய்வதற்காக சிவில் சர்வீஸ் தேர்வு நடத்தப்படுகிறது.

**தேர்வுகள் :**

சிவில் சர்வீஸ் தேர்வுகள் மூன்று கட்டமாக நடைபெறுகின்றன. முதலில் பிரிலிமினி எனப்படும் முதல்நிலைத் தேர்வை எழுத வேண்டும். இத்தேர்வை எழுதியவர்களிலிருந்து தேர்வு பெற்றவர்கள் மெயின் என்ற முதன்மைத் தேர்வை எழுத வேண்டும். இதில் தகுதி பெறுபவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். முதன்மைத் தேர்வு மற்றும் ஆளுதைத் திளன் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களைப் பொருத்து சிவில் சர்வீஸ் பணிகளில் சேர்க்கப்படுகிறார்கள்.

## Preliminary Exam : முதல் நிலை தேர்வு

இம்முதல்நிலை தேர்வானது அப்ஜெட்டிவ் முறையில் நடைபெறும். மொத்தம் 2 தாள்கள், ஒரு தாளிற்கு 200 மதிப்பெண்கள் வீதம் 400 மதிப்பெண்களுக்கு தேர்வு நடைபெறும். இதில் வெற்றி பெறுவோர் (MainExam) முதன்மை தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர்.

**கல்வித் தகுதி, வயது :**

இத்தேர்வை எழுத விரும்புபவர்கள் ஏதேனும் பட்டப்படிப்பை படித்திருக்க படித்திருக்க வேண்டும். பட்டப் படிப்பில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களும் இத்தேர்வை எழுத விண்ணப்பிக்கலாம். இத்தேர்வை எழுதும் மாணவர்களுக்கு 21 வயது ஆகி இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கு ஐந்து அண்டுகளும் ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மூன்று ஆண்டுகளும் வயது வரம்பில் விலக்கு உண்டு. இதேபோல, மாற்றுத் திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினருக்கு வயது வரம்பில் சலுகை உண்டு.

**விண்ணப்பம் :**

22.02.2022-க்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். நிழற்படம் மொபைல் எண், ஆதார் எண் ஆகியவைகளை விண்ணப்பிக்கும் போது ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்

**Website :** அனைத்து தகவல்களும் இணையதளத்தில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

**www.upsconline.nic.in.**

**இலவச பயிற்சி :**

தமிழக அரசின் சிவில் சர்விஸ் தேர்வு பயிற்சி மையம் சென்னை மற்றும் கோவையில் பட்டதாரிகள், முதுநிலை பட்டதாரிகளுக்கு இலவச

பயிற்சி அளிக்கிறது. ஆகிய தேர்வுகளுக்கு இலவச பயிற்சிக்கு தகுதி உடையவர்களை தேர்ந்தெடுக்கும் நுழைவு தேர்வு நடைபெற உள்ளது. ஆகவே இலவச பயிற்சி பெற உடனே விண்ணப்பிக்கவும்.

**விபரங்களுக்கு : www.civilservicecoaching.com.**

அருள்பணி. **பூபதி லூர்துசாமி**
செயலர்
தமிழ்நாடு பொதுநிலையினர் பணிக்குழு

## மறைவட்ட செய்திகள்

### அற்புத குழந்தை இயேசு புதிய ஆலயம் அர்ச்சிப்பு

பாகாயம், மேட்டு இடையம்பட்டி சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள எழில்மிகு அற்புத குழந்தை இயேசு ஆலய அர்ச்சிப்பு 06.01.2022 வியாழன் மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. பேராயர் மேதகு டாக்டர். ஜார்ஜ் அந்தோணிசாமி, சென்னை மயிலை உயர் மறைமாவட்டம், ஐ. ஜான் ராபர்ட், பரிபாலகர் வேலூர் மறைமாவட்டம் மற்றும் குருக்கள் தேசிய நெடுஞ்சாலை முகப்பிலிருந்து மேளதாளத்துடன் ஊர்வலமாக புதிய ஆலயத்திற்கு அழைத்துவரப் பெற்றனர். இறைமக்கள் சாலையின் இருபுறங்களிலும் நிற்க பங்கு சிறுமிகள் பூத்தெளித்து அவர்களை வரவேற்றனர்.



ஆலய முகப்பில் பேராயர் மற்றும் பரிபாலகர் ஆகியோருக்கு இறைமக்கள் சார்பில் கும்ப ஆரத்தி எடுக்கப்பட்டது. பின்னர் வரவேற்பு நடனமும் நடந்தது. அதன் பின்னர் பேராயர் ஆலய வளாகத்தில்



புதியதாக நிறுவப்பட்டிருந்த 53 அடி உயர கொடிமரத்தை அர்ச்சித்து புனிதப்படுத்த மறைமாவட்ட பரிபாலகர் தந்தை அற்புத குழந்தை இயேசுவின் திருக்கொடியை அர்ச்சிக்க, பேராயர் புதிய கொடியை ஏற்றிவைத்து 35ம் ஆண்டு ஆலயப் பெருவிழா நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்கள்.

பின்னர் பேராயர் புதிய ஆலயத்தின் வாயில்கள் (தலைவாயில்) முன்பு ஜெபித்து, ரிப்பன் வெட்டி ஆலயத்தை இறைமக்களின் பயன்பாட்டிற்கு திறந்துவைத்து ஆலயத்தின் உள்ளே செல்ல, கோவிலின் மற்ற கதவுகளும் திறந்து வைக்கப்பட்டன.

பேராயர் அவர்கள் புதிய ஆலயத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள புனித பலபீடத்தை திருத்தைலத்தால் அர்ச்சிக்க தொடர்ந்து மறைமாவட்ட பரிபாலகர் தந்தை, மறைகோட்ட அருட்பணியாளர்களால் பலிபீடம் புனிதப்படுத்தப்பட்டது. ஆலயத்தில் புதியதாக வைக்கப்பட்டுள்ள சுரூபங்களும், சிலுவைப்பாதை நிலைகளும் புனிதப்படுத்தப்பட்டன.
பின்னர் பலிபீடம் துணிகளாலும், மலர்களாலும், விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு மறைமாவட்ட பரிபாலகர் முன்னிலையில் பேராயர், பங்குதந்தை மற்றும் அருட்பணியாளர்களால் ஆடம்பர கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

திருப்பலிக்குப் பின்னர் அன்பியங்களின் ஒருங்கிணைப்பாளர் திரு. செல்வராஜ் அவர்களால் நன்றி பாராட்டப்பட்டது. முதலில் பேராயர் அவர்களுக்கு திருத்தலப் பங்குதந்தை பேரருட்பணி N.T.இருதயராஜ் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கினார். பின்னர் மறைமாவட்ட பரிபாலகருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கினார். பின்னர் விழாவில் கலந்துகொண்ட அனைத்து அருட்பணியாளர்கள் மற்றும் அருட்சகோதரிகளுக்கும் திருத்தல பங்கு பேரவை மற்றும் பொது நிலையினரால் அன்பளிப்புகளும், நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. திருத்தல பாடகற்குழுவினரால் திருப்பலி பாடல்கள் சிறப்பாக பாடப்பட்டன. ஆலயத்தைச் சுற்றிலும், முகப்பிலும் திருத்தல பெண்களால் கோலமிடப்பட்டு அழகுப்படுத்தப்பட்டிருந்தது. ஆலயம், பங்குதந்தை அலுவலகம், கொடிமரம் மற்றும் மேட்டு இடையம்பட்டி சாலை முழுவதும் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது கண்கொள்ளா காட்சியாக அமைந்தது.



விழா நல்ல முறையில் அமைய ஒத்துழைத்த அனைவருக்கும் திருத்தல பங்குதந்தை நன்றி கூறிய பின்னர் நிகழ்வுகள் நிறைவுக்கு வந்தன.

பாகாயம், மேட்டு இடையம்பட்டி சாலையில் அமைந்துள்ள அற்புத குழந்தை இயேசு ஆலயத்தின் 35வது ஆண்டு ஆலயப் பெருவிழா நிகழ்வுகள் 06.01.2022 வியாழக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் துவங்கின. 12.01.2022 புதன்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணை பெருவிழா ஆரம்பமானது. வேலூர் மறைமாவட்டம் விண்ணேற்பு அன்னை பேராலய அதிபர் தந்தையும் மறைகோட்ட முதன்மை குருவுமான பேரருட்பணி M.ஜோ லூர்துசாமி அடிகளாரால் கூட்டுத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றிலும் நற்கருணைநாதர் பவனியாக எடுத்துவரப்பட்டு ஆலய வளாகத்தில் நற்கருணை ஆசீர் வழங்கப்பட்டது.

13.01.2022 வியாழக்கிழமை மாலை 5.45 மணிக்கு 35வது ஆண்டு ஆலயப் பெருவிழாவை தலைமை ஏற்று சிறப்பித்து ஆசீர்வதிக்க வருகைபுரிந்த மறைமாவட்ட பரிபாலகர் பேரருட்பணி I.ஜான் ராபர்ட் அவர்களுக்கு ஆலய முற்றத்தில் மாலை அணிவித்து திருத்தல பங்குதந்தை பேரருட்பணி N.T.இருதயராஜ் அவர்கள் வரவேற்றார். பரிபாலகரோடு 7 அருட்தந்தையர்கள் ஆடம்பர கூட்டுத் திருப்பலியில் பங்கேற்று ஜெபித்தனர். திருப்பலியின் நிறைவில் புதிய ஆலய கட்டுமானப் பணிகளுக்கு நன்கொடையாக ரூபாய் ஒரு இலட்சம் முதல் 10 லட்சங்கள் வரை வழங்கிய ஒவ்வொருவரையும் மறைமாவட்ட பரிபாலகர் வாழ்த்தி கௌரவப்படுத்தினார். விழா சிறப்பாக அமைய உழைத்த, ஜெபித்த, நன்கொடைகள் வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பின்னர் இவ்வளவு அழகான ஆலயத்தை கட்டி எழுப்ப கடவுள் பயன்படுத்திய கருவியான பேரருட்பணி N.T.இருதயராஜ் அவர்களை பங்குமக்கள் பாராட்டி நினைவுப்பரிசும் வழங்கி நன்றி தெரிவித்தனர்.

**J.செல்வராஜ்**
அன்பியங்களின் ஒருங்கிணைப்பாளர்

பேரருட்பணி **N.T.இருதயராஜ்**
திருத்தல பங்குத்தந்தை

## Birthday

| | | |
|---|---|---|
| 1. | Fr. P. Maran | 02-02-1982 |
| 2 | Fr. P. Arputha Rayan | 04-02-1947 |
| 3 | Fr. A. C.John Peter | 04-02-1976 |
| 4 | Fr. P. John Paul | 06-02-1986 |
| 5 | Fr. S. M.Anandaraj | 07-02-1965 |
| 6 | Fr. M. Abraham | 09-02-1959 |
| 7 | Fr. A. Kulandai Yesu | 14-02-1985 |

| | | |
|---|---|---|
| 8 | Fr. A. Robert | 15-02-1960 |
| 9 | Fr. L.J oseph Julian | 16-02-1952 |
| 10 | Fr. P. Vino Alphons Xavier | 21-02-1987 |
| 11 | Fr. A. Don Bosco | 22-02-1981 |
| 12 | Fr. A. Rayappan | 23-02-1963 |
| 13 | Fr. M. Lawrence Pius | 24-02-1981 |
| 15 | Fr. A. Arulsamy | 27-02-1949 |
| 16 | Fr. A. Stephen | 27-02-1980 |

**Ordination Day**

| | | |
|---|---|---|
| 1 | Fr. D. Amalraj | 02-02-1978 |
| 2 | Fr. A. Octavius | 02-02-1978 |
| 3 | Fr. M.A. Arockia Raj | 06-02-2000 |
| 4 | Fr. S.M. Anandaraj | 16-02-1997 |

**Intention**

*For religious sisters and consecrated women*

We pray for religious sisters and consecrated women; thanking them for their mission and their courage; may they continue to find new responses to the challenges of our times. Pope Francis

**Calendar**

| | | |
|---|---|---|
| 2 | Wed | Presentation of the Lord |
| 5 | Sat | St. Agatha, V & M Memorial |
| 6 | Sun | Fifth Sunday of Ordinary Time |
| 10 | Tue | St. Scholastica, V. Memorial |
| 11 | Wed | Our Lady of Lourdes, Feast |
| 13 | Fri | Sixth Sunday of Ordinary Time |
| 14 | Sat | Cyril, monk, and Methodius, B Memorial |
| 20 | Sun | Seventh Sunday of Ordinary Time |
| 22 | Tue | Chair of Peter, Apostle Feast |
| 23 | Wed | St. Polycarp, B & M. Memorial |
| 27 | Sun | Eighth Sunday of Ordinary Time |

**Necrology**

| | | |
|---|---|---|
| 1 | Rev. Br. Andrew Rouiller SDB | 01.02.1944 |
| 2 | Rev. Fr. Thomas George | 06.02.1989 |
| 3 | Rev. Fr. Ladislas Kli Mezyk SDB | 06.02.1974 |
| 4 | Rev. Fr. Luigi Di Fiore SDB | 12.02.1989 |
| 5 | Rev. Fr. Maria Arul SDB | 14.02.2004 |
| 6 | Rev. Fr. John Rathapillai, V.C. | 20.02.1989 |